புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

விரோதி௵ (1889) ஆவணி௴ ௨௰௭ ஸ்தாபிக்கப்பட்டது.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆவணி௴ ௬௨; (1924 ஆகஸ்ட்டு 21) வியாழக்கிழமை. { இலக்கம்—௧௪.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன் றாள்வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

### புததக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அ௵ 1
5. தசகாரியம் அ௵ 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவதசையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது சிட்டுக்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தேன்னுற்காடு ஜில்லா.

இனும்! இனும்!! இனும்!!!

### இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணக் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்டமுடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை ரூபா | 10—0—0 |
| 20 ,, | 40 ,, | ,, | ,, ,, | 5—0—0 |
| 10 ,, | 20 ,, | ,, | ,, ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தேன்னுற்காடு ஜில்லா)
(H. 27.)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA.)

### 4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!

திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவாராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நமைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராவி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலிய சகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.

R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵ ஆவணி௴ ௬௳ வியாழக்கிழமை.

## ஆயுர்வேத வைத்தியமும் பட்டின பரிபாலன சங்கமும்.

ஆயுர்வேத வைத்தியம் தமிழ் வைத்தியம் சிங்கள வைத்தியம் யூநானி வைத்தியம் என்னும் இவ்வைத்திய முறைகளே இலங்கை இந்திய வாசிகட்கு அனுகூலமானவையெனக்கண்டு இந்த இரு தேசங்களிலும் வசிப்போராற் கைக்கொள்ளப்படுகின்றன. ஆங்கில வைத்தியத்தைப் பரப்புதற்கு அரசினர் பல முயற்சிகள் செய்தும் இங்குள்ளாருட் குறைந்ததொகையினரே ஆங்கிலவைத்தியத்தைக் கைக்கொள்ளுகின்றனர். நமது யாழ்ப்பாணத்திலே நூற்றுக்கு எழுபத்தைந்துக்குமேற்பட்ட தொகையினர் ஆயுர்வேத வைத்தியத்தையே கைக்கொள்ளுகின்றனர். யாழ்ப்பாணத்திலே திறமைவாய்ந்த ஆயுர்வேத பண்டிதர்களிருத்தலினால் இங்குள்ள தமிழ்மக்கள்மாத்திரமன்றி, பறங்கியருட் சிலரும் இந்த வைத்திய முறையை விரும்பிச் செல்கின்றனர். ஆங்கிலவைத்தியருட் சிலர் தமக்கும் தமது மனைவி மக்கள் சுற்றத்தவர்க்கும் நோய்கண்டவிடத்து ஆயுர்வேத பண்டிதர்களைக்கொண்டு வைத்தியஞ்செய்வித்து அனுகூலமடைந்தமையை யாம் நேரில் அறிவோம்.

இங்ஙனமெல்லாமிருத்தலினாற்போலும் சென்ற வாரம் கூடிய பட்டின பரிபாலன சங்கக் கூட்டத்தில் ஒருஅங்கத்தவர் குறித்த சங்க எல்லையுள் வசிப்பவர்கள் பொருட்டுஒருஆயுர்வேதவைத்தியசாலையைஸ்தாபித்தல்வேண்டு மென்னும் நிர்ணயத்தை யெடுத்தாண்டனர். இந்த நிர்ணயம் மேற்படி சங்க அங்கத்தவருட் கூடிய தொகையினரின் அங்கீகாரம்பெற்று நிறைவேறியது. இந்நிர்ணயத்திற்கு மேற்படி சங்க அங்கத்தவர்களாகிய மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரையவர்களும், மிஸ்டர் ஜெ. கே. சண்முகமவர்களும் மாறாய் நின்றனர். இந்துசாதன ஆங்கிலப் பத்திரிகையும் தேசாபிமானியும் இவ்விருவரும் மாறாக நின்றமையையிட்டு, இவர்களைப் பெரிதுங் கண்டித்தன. இவர்களுள் ஒருவராகிய மிஸ்டர் ஜே. கே. சண்முகமவர்கள் தாம் குறித்த நிர்ணயத்திற்கு மாறாக நின்றமை உண்மையென்றும் அதற்குத் தக்க நியாயங்கள் உளவென்றும் தாம் ஒருபோதும் ஆயுர்வேத வைத்திய முறையைக் குறைகூறவில்லை யென்றும், ஆயுர்வேத முறையிலே தமக்கு அதிகநம்பிக்கையுண்டென்றும், பல சமையங்களிலே தமது குடும்பத்தவர் ஆயுர்வேத வைத்தியஞ் செய்வித்துச் சிததியடைந்திருக்கின்றனரென்றும் கருத்தமைய ஒருகடிதத்தை எமக்கு அனுப்பியுள்ளனர். தாம் குறித்தநிர்ணயத்திற்கு மாறாக நின்றமைக்குக் காரணமென்ன வென்பதைப் பின்வருமாறு அக்கடிதத்திற் கூறுகின்றார்:

"நான் சில தக்க காரணங்கள் பற்றி டக்டர் பொன்னுத்துரையின் அபிப்பிராயத்திற்குச் சார்பாகநின்றேன். இந்தப் பட்டின பரிபாலன சங்க எல்லையுள் மேலைத்தேச வைத்திய முறையில் வல்லவர்களும் கீழைத்தேச வைத்தியமுறையில் நிபுணருமானபல வைத்தியர்களிருக்கின்றார்கள். வண்ணார்பண்ணையில் ஒரு வீதியிற்றானே திறமைவாய்ந்த ஐந்து ஆறு வைத்தியர்களிருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பான்மையும் தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு யாதுஞ் செலவு பெறுமல் வைத்தியஞ் செய்துவருகிறார்களென நானறிந்துளேன். தக்க ஆங்கில வைத்தியர்களைக்கொண்ட அரசினர் வைத்தியசாலையொன்றும் மேற்படி சங்க எல்லையுளிருக்கின்றது. தம்பொறுப்பில் வைத்தியசாலை வைத்து நடத்தும் ஆங்கில வைத்தியர் சிலரும் இங்கே இருக்கின்றார்கள். மேலும் அரசினர் பொறுப்பில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலையை இங்கே தாபித்து இங்குள்ள ஆயுர்வேதவைத்தியர்களுள் ஒருவரைத் தெரிந்து வைக்கும்போது மற்றும் வைத்தியர்கட்கு அவ்விஷயமாகத் திருப்தியீனமுண்டாகும். ஆதலால் ஆயுர்வேத கல்லூரியொன்றை அரசினர் பொறுப்பில் ஸ்தாபித்து அக்கல்லூரியில் நன்கு பயின்று சித்தியடைபவர்களையே அவ்வாறான வைத்தியசாலைகள் ஸ்தாபித்தபின்னர் ஆங்கு நியமித்தல்வேண்டும். இவைகளை யான் பட்டின பரிபாலன சங்கக் கூட்டத்தில் அன்று கூறியவை. இதற்கு ஆங்குச் சமுகமாயிருந்த மற்றும் அங்கத்தவர்களே சான்றுபகர்வர். பத்திரிகைகளில் இவ்விஷயமாக எம்மைக் குறித்து வெளிவந்தவை சுத்த அபத்தமாகும்".

இக்கடிதத்தை நோக்குமிடத்து மிஸ்டர் சண்முகமவர்களும் ஆயுர்வேத வைத்தியமுறையைப் பெரிதுமமெச்சுகின்றனர் என்பது வெளிப்படை. அனுபவத்தாலும் அறிவாலும் கடவுட்பத்தியாலும் சிறந்து விளங்கிய மகா ஞானிகளாகிய இருஷிகளும் முனிவர்களும் கண்ட ஆயுர்வேத முறை உஷ்ணதேய வாசிகளாகிய நம்மனோர்க்குப் பயன்படுமன்றி, இன்னும் பூரணமாகாது காலந்தோறும் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படும் சீதளதேயத்திற்கேற்ற வைத்தியமுறை நம்மனோர்க்கு அத்துணை அனுகூலமாகாது. நமது அரசினர் இந்தஆயுர்வேதவைத்தியமுறையை இனியேனும் விருத்தி செய்தற்கான மார்க்கங்களை அனுசரித்தல்வேண்டும். இந்திய அரசினர் ஆயுர்வேதக் கல்லூரிகட்கு உதவி செய்து அம்முறையை விருத்தியாக்குகின்றனர்.

---

## சேதுதீர்த்த மகத்துவம்.

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தின் தென் அந்தத்திலுள்ளதும் புண்ணியதீர்த்தங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்து விளங்குவதும், மகான்களாற் புகழ்ந்து போற்றப் பெறுவதும் இச்சேதுதீர்த்தமாம். இதன் மகத்துவத்தை விரித்துக் கூறும் நூல் "சேது மான்மியம்" எனப் பேர் பெறும். இது சூதமாமுனிவராற் சவுனகாதி முனிவர்களுக்கு வடமொழியிலே உபதேசிக்கப்பட்டது. ஸ்ரீராமபிரான் இராவண சங்காரஞ் செய்து அயோத்திநகரத்துக்குத் திரும்பும்போது இராவணன் முதலினோரைக் கொன்றமையினாற் பிரமகத்தி தொடருவதைக் கண்டார். அவர் இச்சேது தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தமாத்திரத்தே அப்பிரமகத்தி அவரைவிட்டு நீங்கியது. அங்கோர் சிவலிங்கப் பிரதிட்டையும் செய்தனர். அத்திருக்கோவில் ஸ்ரீராமபிரானால் அமைக்கப்பட்டமையினால் இராமேசுரம் என்றும், அங்குக் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமான் இராமநாதன் என்றும் வழங்கப்பெறுகின்றன. இந்த மகத்துவம் பொருந்திய சேது தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து இராமநாதனைத் தரிசிப்போர் அதிவிசேட பலனைப் பெறுவர். இங்குள்ள மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியஇம்மூன்றும் ஏனைய எல்லாவற்றிலும் மிகச் சிறந்தன. தரிசித்தவர்களுக்கு ஞானாநந்த பரமோக்ஷங் கொடுப்பன. விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் முறையே அருவாய் அவருள் ளத்தே வெளிப்பட்டு அருள்சுரத்தலும், உருவாய் நேரில்வந்து அருள் செய்தலும், அருவுருவாய்க் குரு லிங்க சங்கமங்களை அதிட்டித்து அனுக்கிரகித்தலுமாகிய மூவகை அனுக்கிரகத்தையுங் கொடுப்பன.

சேது தீர்த்தத்தில் விதிப்படி சிரத்தையோடேனும், விதிவழிச் சிரத்தையின்றியேனும் ஒருவன் ஸ்நானஞ் செய்வானாயின், அவன் துன்பம் பயம் மிடி முதலியன எய்தப்பெறான். ஸ்ரீ இராமபிரான் இலங்கைக்கு வரும்பொருட்டுக் கட்டப்பட்ட அணையே சேதுவென்று சொல்லப்படும். அந்த அணை பத்து யோசனை அகலமும் நூறு யோசனை நீளமுமுள்ளது. இதன் அடி நவபாஷாணமென்றும், மத்தி தருப்பசயனமென்றும், அந்தம் திருப்புல்லாணியென்றும் சொல்லப்படும். இவ்வணையின்பொருத்தே சேதுவாகும். இச்சேதுதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்தோர் செய்த பாவங்களெல்லாம் நீங்கப்பெற்றுச் சிவானந்த மடைவர். இவ்வணையின் பக்கதிலே பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் சக்கரதீர்த்தம் முதலான இருபத்துநான்கு தீர்த்தங்கள் விசேடமாகும். சீதாகுண்டமென்னும் தீர்த்தம் தங்கச்சி மண்டபத்திற்கு வடக்கே கால்மைல் தூரத்திலுள்ளது. வேதாள தீர்த்தம் வெற்றிலை மண்டபத்துக்கு மேற்கே ஆறுமைல் தூரத்திலும், பாவநாசம் வெற்றிலைமண்டபத்திற்குச் சமீபத்திலும், மங்கள தீர்த்தம் தங்கச்சி மண்டபத்திற்குக் கிழக்கேயும், அமுத தீர்த்தம் ஏகாந்த இராமநாதசுவாமிகோயிலிலும், பிரமகுண்டம் இராமேசுரத்துக்கு வடக்கே அரைமைல் தூரத்திலும், அனுமகுண்டம் இராமேசுரத்துக்கு வடக்கே கால்மைல் தூரத்திலும், அகத்திய தீர்த்தம், இராம தீர்த்தம், இலக்குமதீர்த்தம், சடாதீர்த்தம், இலக்குமிதீர்த்தம், அக்கினிதீர்த்தம், அக்கரதீர்த்தம், சிவதீர்த்தம், முத்தீர்த்தம், கோடிதீர்த்தம், சருவதீர்த்தம் முதலியன இராமேசுர ஆலயத்தினுள்ளும் சமீபத்திலுமுள்ளன. இங்கே சிரார்த்தம் அந்தியேஷ்டி தர்ப்பணம் பூதானம் கோதானம் முதலியன செய்வோர் விசேஷ பலனைப் பெறுவர்.

இங்குள்ள தீர்த்தங்களெல்லாவற்றிலும் ஸ்நானஞ்செய்தபின்னரே கோடிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தல்வேண்டும். இது இராமபிரான் ஸ்தாபித்த சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்யும் பொருட்டு அவ்விலிங்கத்தினருகே தமது வில்லின் நுனியாற் றுளைத்துப் பாதாள கங்கையை வரவழைத்த தீர்த்தமாகும்.

இந்திய தென் அந்தத்திலிருந்து யாத்திரை செய்வோர் ஆரம்பத்திலே சேது தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து இராமேசுரஞ்சென்று சேதுமாதவரையும் இராமநாதனையும் பர்வதவர்த்தனியம்மையையும் தரிசித்தபின்னரே ஏனையஸ்தலங்களுக்குச் செல்லுதல்வேண்டும்.

---

## உலகம் பலவிதம்.

"பெற்றதாய்தந்தைதன் சுற்றமேமுதலான பெரியோரை முனிதல்வேண்டாம்" என்றும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ" மென்றும், "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" யென்றும், தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை" யென்றும் ஆன்றோர் கூறியுள்ளபிரகாரம் நமது முன்னோர் தங்கள் தாய்தந்தையரைப் பூசித்து அவர்கள் சொற்பிரகாரம் நடந்துவந்தனர். சமதக்கினிமுனிவருடைய புதல்வராகிய பரசுராமர் தந்தை வாக்கியபரிபாலனஞ்செய்யும்படி தவறிழைத்த தன் தாயாகிய ரேணுகையை வாள்கொடு தடிந்து பின்னரும் பிதாவின் வரம்பெற்று அவளை மீட்டனர். சிற்றன்னையின் சொற்படி ரகுராமர் பதினான்கு வருடம் வனவாசஞ் செய்தனர். "மகனே இம்மரக்கலத்தில் இந்த இடத்திலேயே நின்றுகொள்ளுதி" என்று யுத்தவீரனாகிய தன் தந்தை சொற் கடந்தற்கஞ்சி தீவாய்ப்பட்டு எரிந்து கரிந்து சாம்பராயினான் கசபியன்காவென்னும் ஒரு அயிரோப்பிய வாலிபன். ஆனால் அக்காலம் போய்விட்டது; விபரீதகாலம் வந்துவிட்டது. இக்காலமோ, "தாய்புத்தி சொன்னால் மறுத்திடுங் காலம் உயர் தந்தையைச் சிறுகாலம், சற்குருவை நிந்தை செய்காலம் மெய்க் கடவுளைச் சற்றுமெண்ணாத காலம், பேய்தெய்வமென்று உபசரித்திடுங்காலம் புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டி வையினுங் கேட்கின்றகாலம் நற்பெரியோர் சொற் கொளாதகாலம், மீதய்வுடன் பெரியவன் சிறுமையுறுகாலம் மிகுசிறியவன் பெருகுகால" மாகும். இக்காலத்திலே, படாதபாடெல்லாம் பட்டுத் தமக்கு ஆங்கிலக்கல்வி பயிற்றி உத்தியோகத்தில் அமரச் செய்துவைத்த தந்தையர் மைந்தரைக் காணும்படி ஊரிலிருந்து உத்தியோக ஸ்தானத்திற்குச் சென்றால் பிள்ளைகள் தம்மோடொத்த உத்தியோகத்தர் முன்னிலையில் அவர்களைத் தந்தையென்று சொல்ல வெட்கமுற்று "எமது ஊரில் வசிக்கும் அறிமுகமான கிழவன்" என்று ஆங்கிலத்திலேயே சொல்லிவிடுகின்றார்கள். "அப்பு அலுவலாயிருக்கிறார்; சிற்றப்பா நெருப்பெடுத்துவா புகையிலைச் சுருட்டுப் பற்றவைக்க" என்று தன் சிறிய தந்தைக்குக் கட்டளையிட்டானொருசிறுவன். யாழ்ப்பாணத்து வாலிபனொருவன் கொழும்பில் உத்தியோகமாக விருக்குங்காலத்தில் அவனுடைய விடுதிச்சாலையில் அவன் தந்தை அவனைக் காணும்படி சென்று சில நாட்களாக அங்குத் தங்கிவந்தார். இப்படியிருக்கும்போது ஒரு தினம் இரு பறங்கி வாலிபர் இந்த உத்தியோகத்தனைக் காணும்படி விடுதிச் சாலைக்கு வந்தனர். வருதலும் பிள்ளையின் குணத்தை யறிந்த பிதா தானிருந்த அந்தஅறையைவிடுத்து அடுத்த அறையுட் போயிருந்தார். வந்த வாலிபர் அந்தக் கிழவன் யாரென்று ஆங்கிலத்தில் மகனைக் கேட்க, மகன் "அவர் எங்களூரிலிருக்கும் ஒரு ஏழைக் கிழவன் ஏதும் வாங்கிக்கொண்டு போகலாமென்னுமெண்ணத்துடன் இங்கு வந்திருக்கிறார்" என்றான். அவ்வாலிபர் அது மெய்யென நம்பிக்கொண்டு அவ்விடம்விட்டகன்றனர். மகன் சொன்ன உத்தரம் கிழவருக்கு விளங்கிவிட்டது. கிழவர் மகனைப்பார்த்து "மகனே, ஏன் அப்படிச் சொன்னாய்; தந்தையென்று சொல்ல வெட்கப்பட்டால் உன் தாயுடைய புருஷன் என்று என்னை அவர்களுக்கு விளங்கப்படுத்தி யிருக்கலாமே" யென்றாராம்

* * *

அரிசிநெல்விலையை அரசினர் கட்டுப்படுத்தியமையையிட்டு அரிசி வியாபாரிமார் இங்கே அதிக ஆத்திரங் கொள்ளுகிறார்களாம். இது சரியல்லவே. அரிசி வியாபாரிமாருக்கு இப்பொழுதும் நியாயமான இலாபமுண்டென்பது அவர்கள் மனச்சாட்சிக்கும் அரிசி நெல் வாங்கியுண்ணுஞ் சனங்களுக்குந் தெரியும். யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுதற்காக இந்தியாவில் வாங்கிவைத்த அரிசியை இங்கே அனுப்பாது அங்குத்தானே வைத்து விற்றுவிடும்படி இங்கு வந்திருக்கும் அரிசி வியாபாரிமார் அங்குள்ள தங்கள் பிரதிநிதிகட்குத் தெரிவித்திருக்கின்றார்களென வதந்தி பிறக்கின்றது. இந்த வதந்தி உண்மையானால் அரிசி வியாபாரிமாரின் மனப்பான்மை மெச்சத்தக்கதல்லவே. அநேக வருடங்கட்கு முன்னே தென்னிந்தியாவிலிருந்து வியாபார நோக்கமாக இங்கு வந்து வியாபாரம் நடத்தி யாழ்ப்பாண வாசிகளோடு சிநேகபாவமாக நடந்து இவ்வியாழ்ப்பாண வாசிகளாற் பெரும் இலாபமடைந்துவரும் வியாபாரிமார் இப்பொழுது இவ்வாறான குரோதங் கொள்வரேல் இவர்கள் நடுநிலைமையெங்கே! நன்றியெங்கே! ஊரவர்களைப் பகைத்துக்கொண்டு இந்த வியாபாரிமார் இங்கேயிருந்து இலாபத்தோடு வியாபாரஞ் செய்யலாமென எண்ணவொண்ணாது. அரிசி வியாபாரிமார் ஊரவர்களை அந்நியராக மதித்து அவர்கள்மேற்குரோதமபாராட்டி அவர்கட்கு இடைஞ்சலை விளைப்பரேல் ஊரவர்கள் அரிசி நெல் வியாபாரத்தைத் தம் பொறுப்பில் ஏற்று நடத்தவேண்டியவராவர். இத்தவிதமான எண்ணம் இப்பொழுது இங்குள்ள சில தனவந்தருள்ளத்தில் ஜனித்திருக்கின்றது. அன்றியும் பசுவைக்கொன்று அதனை தோலினாற் செருப்பைஆக்கி அச்செருப்பைத் தானங் கொடுத்துப் புண்ணியத்தை யீட்ட முயல்வார்போல, இங்குள்ளாரை வருத்திப் பொருளீட்டி இந்தியாவிற் செய்யப்படும் அன்னதானம் முதலிய தானங்களினால் யாதும் புண்ணியமில்லையாம். "நாசகாலே விபரீதபுத்தி" என்றபடி கேட்டிற்கு அறிகுறியான இந்தத் துர்ப்புத்தியை வியாபாரிமார் அறவே துறந்து யாழ்ப்பாண வாசிகட்கு வரும் இன்பமுந் துன்பமும் வாழ்வுந் தாழ்வுந் தங்களுக்கும் பங்காகுமென நினைத்து யாழ்ப்பாண வாசிகளோடு சகோதரபாவமாக நடந்து லாபத்தையும் நீங்காப் புகழையும் புண்ணியத்தையும் அடைதற்கு முயலுதல்வேண்டும்.

* * *

நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்கு உற்சவ தரிசனத்தின்பொருட்டுச் செல்பவர்கள் வெளிவீதியில் வெற்றிலைபாக்குண்டு எச்சிலுமிழ்ந்து வீதியை அசுசிப்படுத்திவிடுகின்றார்களே; நூற்றுக் கணக்கான விரதகாரர் அநுதினமும் அங்கப்பிரதக்கிணஞ் செய்யுந் திருவீதியில், நல்லைக் கந்தசுவாமியார் எழுந்தருளித் திருவுலா வரும் பரிசுத்தமான பிரகாரத்தில் இப்படி அசுசிசெய்வது குளிக்கப்போய்ச் சேறுபூசுதலை யொக்கு மல்லவா என்று நமது முருகேசு முறையிடுகின்றார்.

---

## சமாசாரம்.

காலநிலை:—சென்ற திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் நன்மழைபெய்தது. இப்பொழுதும் மழைக்கோலங் காணப்படுகிறது. கமக்காரருக்கு இம்மழைபொன்மழையாகும்.

சச்சிதாநந்த ராஜயோகிகள்:—சச்சிதாநந்த ராஜயோகிகள் சென்ற இரவு புகைரதமார்க்கமாக இங்குவந்து சேர்ந்தார்கள். யோகிகள் இன்று பிற்பகல் ஆறு மணிதொடக்கம் கல்லூரா மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் "சுப்பிரமணிய பரத்துவம்" என்னும் விஷயமாக உபந்நியாசம் செய்வார்கள். சைவசமயிகள் இந்த அரிய தருணத்தைத் தவறவிடவொண்ணாது.

சவாரிக்காரர் தகுந்ததண்டனை பெற்றனர்:—மாவிட்டபுரம் இரதோற்சவதினத்தில் மாட்டுச்சவாரி செய்தமையினால் மல்லாகக்கோட்டிற் குற்றம் சாட்டப்பட்ட எல்லோரும் தக்க அபராதம் விதிக்கப் பெற்றனர்.

உபந்நியாசம்:—ஸ்ரீமத். சுவாமி விபுலாநந்தர் அவர்கள் ஆவணி௴ 9௳ (24-8-24) ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணியளவில் சுன்னாகம் பிராசீனபாடசாலை மண்டபத்தில் 'வேதாகம விளக்கம்' என்னும் விஷயமாக ஓர் உபந்நியாசம் செய்வார்கள்.

அப்படி ஒன்றும் சம்பவிக்கவில்லை:—மாவிட்டபுர உற்சவதினத்தில் ஒரு மோட்டரதம் சனக்கூட்டம் அதிகமான இடத்தில் வேகமாயோடி ஒரு பெண்ணை இடறியது. சனக்கூட்டம் அதிகமாயுள்ள இடத்தில் நடந்த அபாயமானமையினால் கருமம் இரகசியமாய் மறைந்துவிட்டதாம். அப்பெண்ணும் சென்றவாரம் ஒருவாறு இறந்துவிட்டனள்.

வங்கிச் சிறப்புமார் பரீட்சை:—நவரெலிநாஷனல் வங்கிச்சிறப்பராகவிருக்கும் ஸ்ரீ. நா. கனககாயகமவர்களே இப் பரீட்சையில் இலங்கை வாசிகளுள் முதன்முறைசித்தியெய்தியிருக்கின்றனர். இவர் கோப்பாயை ஜெநநஸ்தானமாகவுடையவரும் சமாதான நீதி பதியுமாகிய ஸ்ரீ. அ. நாகநாத முதலியாரவர்களின் புத்திரராவர். இவர் மென்மேலும் சித்தியடையக் கடவுள் திருவருள் பாலிப்பாராக. கடித.

பிரசங்கம்:—சென்ற திங்கட்கிழமை இரவு சந்தர்மடம் கந்தபுராணமடத்தில் மகாதேவ சுவாமிகளால் "பரோபகாரம்" என்னும்விஷயமாகஓர்சிறந்தஉபந்நியாசம்செய்யப்பெற்றது.

—சென்ற திங்கட்கிழமை இரவு சாவகச்சேரிக் கணித்தாயுள்ள கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நீர்வேலி சன் சிற்சபேசன் அவர்களால் "சைவசமய மாட்சி" என்னும் விஷயமாக ஓர் உபந்நியாசம் செய்யப்பெற்றது.

சாராயத் தவறணைகளும் அந்நியதேசக் குடிவகைக் கடைகளும் நீக்கப்பட்டன:—அம்பலாங்கொடையிலுள்ள சாராயத் தவறணைகளையும், அந்நியதேசக் குடிவகைக் கடைகளையும் நீக்கும்பொருட்டு அங்குள்ள சனங்கள் இந்த ஆகஸ்ட்மீ 18உ திங்கட்கிழமை முழு விருப்பத்துடன் சம்மதங் கூறினர். சம்மதங் கூற வேண்டியவர்களின் தொகை 2707. இதில் 2029 பேர் சம்மதங் கூறியமையினால் நூற்றுக்கு 77 விகிதத்துடன் ஷை குடிவகைக்கடைகள் நீக்கப்படலாயின. அத்தருணம் அங்குத் தலைமைவகித்திருந்த மிஸ்டர் டீ. லா. கார்ப் அவர்கள் "இந்த மதுவிலக்கில் ஈடுபட்டு உழைத்தவர்கள் ஷைகுடிவகைகள் சோரமாக விற்கப்படாதபிரகாரமும் தகுந்த சிரத்தை செலுத்த வேண்டு"மெனக் கூறினர்.

## நீர்வேலிக் கந்தசுவாமிகோவிற் கும்பாபிஷேகம்.

இவ்வாலயத்திலே நடைபெறும் கும்பாபிஷேகத்தின்பொருட்டுச் சென்ற திங்கட்கிழமை இரவு கர்மாரம்பம் நடைபெற்றது. இந்தமாதம் 12உ புதன்கிழமை கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகமும், அன்று முதலாகப் பன்னிரண்டு தினங்களுக்கு அலங்கார உற்சவமும் விதிப்படி செவ்வனே நடைபெறும். 17உ திங்கட்கிழமை தேவியர் தவசிருத்தல், பிற்பகல் கலியுகவரதராகிய சுப்பிரமணியப் பெருமான் காட்சிகொடுத்தருளுதல், இரவு திருக்கல்யாணம்என்பனவைகளும், 24உ திங்கட்கிழமைதீர்த்தோற்சவமும் நடைபெறும். பிரமஸ்ரீ. சு. சுவாமிநாதக் குருக்களவர்கள் சிரேஷ்ட ஆசாரியராக இருந்து ஷை கும்பாபிஷேகத்தை விதிப்படி சிறப்பாக நடத்துவார்கள். சைவசமயிகள அத்தினங்களிற் சுவாமிதரிசனஞ் செய்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்வார்களாக.

## மயிலிட்டிதெற்குச் சைவ வாலிபர் சங்கம்.

இச்சங்கத்தின் 3ம் வருடக் கொண்டாட்டம் இந்த ஆவணி மீ 1உ சனிக் கிழமை இரவு 6 மணி தொடக்கம் குரும்பசிட்டி மகாதேவ வித்தியாலய மண்டபத்தில் வெகு விமரிசையாய் நடைபெற்றது: மண்டபமும் அதன் சுற்றுப்புறங்களும் தோரணங்களாலும் புஷ்பங்களாலும் வெகு அழகாய் அலங்கரிக் கப்பட்டிருந்தன. மயிலிட்டி தெற்கிலுள்ள சைவர்களாலும் அயலூர்களிலுள்ள அன்பர்களாலும் மண்டபம் நிரம்பப்பெற்றிருந்தது. இரவு8மணி தொடக்கம் கொக்குவில் திருவாளர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் திருவிளையாடலின் "பழியஞ்சியபடலம்" பக்கவாத்திய சகிதமாகக் கதாப்பிரசங்கஞ்செய்யப்பட்டது. பிள்ளையவர்கள் ஷை விஷயத்தைப் பல திருஷ்டாந்தங்களுடன் சபையோருள்ளத்தைக் கவரக்கூடிய விதமாக எடுத்து விளக்கிக் காட்டினர். அதனை எல்லோரும் பக்தியுடன் கேட்டுஆனந்தமடைந்தனர். இரவு பன்னிரண்டு மணியளவில் தேவாராதனை நடைபெற்றுச் சந்தனம் பன்னீராதியன வளிக்க மங்களகரமாகக் கொண்டாட்டம் நிறைவேறியது. இச்சங்க அபிவிருத்தியைக் குறித்து உதவிசெய்துவரும் உள்ளூர்வாசிகளும் கொழும்பு சிங்கப்பூர் முதலான பிறவூர்வாசிகளும் சகல ஐஸ்வரியங்களும் பெற்றுவாழும் வண்ணம் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

—கடித.

# கடிதம்.

## நமது சகோதரிகட்கு.

(முற்றொடர்பு.)

அன்பார்ந்த சகோதரிகாள்!

இவ்வுலகம் ஆண்பாலாரைக்காட்டிலும் பெண்பாலாராகிய நம்மிடத்திலேயே அதிகமாகத் தங்கியிருக்கின்றது. ஆகையால் நாம் நம் கடமைகளைக் குறைவற நடத்தல்வேண்டும். அவ்விதம குறைவற நிறைவேற்றுவதற்கு நமக்கு ஆவசியகம் கல்விப்பொருள் வேண்டும். அக்கல்விப்பொருளே நம்மை நல்வழியில்விடும். அஃதின்றேல் நாம் நம் இல்லறவாழ்க்கையில் இடைஞ்சற்பட நேரிடும். சிறுவயதிற் கற்குங் கல்வியே அதிக நன்மைபயக்கும். அது பற்றியே ஔவையாரும் 'இளமையிற் கல்' எனக் கூறியுள்ளார். நிற்க,

பெற்றோர்களே, உங்கள் அருந்தவப் பெண்களுக்கு ஆங்கிலம் பயிற்றுவதிற் பிரயோசனமில்லையென்பதை நன்றுயுணர்ந்து, தமிழ்க் கல்வியை அவசியம் கற்பியுங்கள். அதுவே நமக்கு இன்றியமையாதது. ஆங்கிலம் பயிற்றுவதால்உத்தியோகஸ்தர்களாலும், பணப்பெருமையுள்ளவர்களாலும் புகழப்படுவீர்களேயன்றி வேறொரு பயனுமில்லை தமிழ்க் கல்வியைப் பயிற்றுவிப்பதால், அறிவாளிகளாலும் பெரியோர்களாலும், கடவுளாலும் கொண்டாடப்படுவதுமல்லாமல், இல்லற வாழ்க்கையில் மேன்மையையும் மறுமையில் நற்கீர்த்தியையும் அடைவீர்கள். பெண்கள் கற்பதாற் புருஷனுக்கு மிகவும் உதவி. எவ்விதமெனில் தங்கள் நாயகனுக்கு ஓர் இடுக்கண் உற்றகாலத்து மந்திரிபோற் புத்தி கூறவும், அவர்களது ஏவலாட்களைப்போல் வீட்டுக்கருமங்களைச் செய்யவும், வீட்டுப் பொருள்களைச் சிதறவிடாது பக்குவப்படுத்தவும், பெற்ற தாயினும் விசேஷமாகத் தம் கணவனைப் போஷிக்கவும் இன்னும் பற்பல விஷயங்களிலும் உதவுவார்கள் அன்றியும் பெண்கள் படித்திருந்தால் தம் வீட்டு வேலைகள் முடிந்தவுடன், அயல் வீட்டுக்குப் போகாமலும், வீண் வார்த்தைகளிற் காலத்தைக் கழிக்காமலும் புஸ்தகங்களை வாசித்து நல்வழியைத் தேடுவார்கள். தம் பிள்ளைகட்கு நல்வழியைப் போதிப்பார்கள். அவர்களைக் கண்டபடி முரட்டுத்தனமாய் அடித்துக் குத்தாது, அவர்கள் புரளி செய்தால் அவ்விதம் செய்ய விடாது நற்புத்தி புகட்டுவார்கள். பெண்கள் கற்பதால் இவ்வித பல நன்மைகள் உண்டாகும். படித்தவர்களிலும் சிலர் தம் தீய ஒழுக்கத்தை விடாதிருக்கிறார்களேயெனப் பலர் கேட்கிறார்கள். அது அவர்கள் பிறவிக்குணமாயிருப்பதால் அதை எவருந் தடுக்க இயலாது. முற்காலத்துப் பெண்களிற் பலர் பள்ளிக்கூடம் சென்று கல்விகற்காமல் தம் தாய் தந்தையராலும் கணவனாலுமேயே கல்விகற்று நறகீர்த்தியடைந்தனரென அறியக்கிடக்கிறது. பெண்களுக்கு வீட்டிலேயே கல்வி கற்றுக் கொடுத்த லுத்தமம். இன்றேல் தனிப் பெண்பாடசாலைகளிற்பயிற்றுவித்தல்வேண்டும்.

இங்ஙனம்,

க. நவரத்தினஅம்மாள்,

வண்ணார்பண்ணை.

# சுகாதாரம்.

## போசனம்.

"மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு."

நாம் சீவிப்பதற்கு எப்படிச் சுத்தமான காற்றும் சுத்தமான தண்ணீரும் வேண்டுமோ, அதுபோலவே நாம் சீவிப்பதற்குச் சுத்தமான போசனமும் வேண்டும். இந்த விஷயத்தை நாம் கொஞ்சம் ஊன்றி யாலோசித்தல் வேண்டும். ஏனெனில் தற்காலம் மனிதராய்ப் பிறந்த நாம் சாப்பாட்டுவிஷயத்திலே மிருகங்களோடு மொப்பிடக்கூடாத நிலைமையி லிருக்கின்றோம்.

உலகத்திலே எல்லாச் சீவராசிகளும சீவிப்பதற்காகவே சாப்பிடுகின்றன; மனிதராய்ப் பிறந்த நாம் சாப்பாட்டிற்காய்ச் சீவிக்கின்றோம். பட்சிகளைப் பாருங்கள், காலையிற் சூரியோதயத்துக்குமுன் கீதத்தோடெழுந்திருந்து, கீதத்தோடு பகற்காலத்தைக்கழித்துப் பின்னும் கீதத்தோ டுறைவிடம் போய்ச் சேர்கின்றன. இவற்றிற் கென்ன கவலை; என்ன துக்கம்; என்ன கஷ்டம்; எந்தநேரமும் ஆடலும் பாடலுந்தானே! இன்றைக்குப் போசனம் இல்லையென்று கஷ்டப்படப் போகின்றனவா; அல்லது நாளைக்குப் போசனத்திற்கென்ன செய்யப்போகின்றேன் என்று ஒப்பாரி சொல்லப் போகின்றனவா, களவெடுக்கப்போகின்றனவா அல்லது கொலைசெய்யப்போகின்றனவா? சந்தோஷமும் சமாதானமுமே அவர்களின் சீவியத்தைக கொள்ளைகொண்டிருக்கின்றன.

கடவுள் மனிதராகிய எங்களுக்கும், இயற்கையாய்ப் போதிய உணவுப்பொருள்களை வஞ்சனையில்லாது நாம் சீவிப்பதற்குக் கொடுத்திருக்கின்றார். ஆனால், நாம் இயற்கைக்கு மாறாக உண்ணவும், உடுக்கவும், உறங்கவும் தொடங்கினமையினால், உயிரை உடலோடு வைத்திருப்பதே பெரும் பாரமாய் வந்துவிட்டதுமாத்திரமன்று; மனிதவர்க்கத்தினுள்ளே ஐக்கிய ஈனமும், பொறாமையும், லோபமும், தாரித்திரியமும், பொய்யும், களவும், பயமும், ஐயுறவும் சித்தியசஞ்சலமும் குடிகொண்டுவிட்டன. இப்படியான நிலையில் இருந்துகொண்டும் "நாங்கள் மனிதர்" என்று வெட்கமில்லாது பெருமையாய்ப் பேசிக்கொள்ளுகின்றோமே!

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் மருந்தைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்று திருக்குறளைப் படித்துப்பார்த்தேன். அவருடைய கொள்கையும தற்கால வைத்திய நிபுணர்களின் கொள்கையைப் போலவேயிருக்கின்றது. அஃதாவது:—

"மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணி
னூறுபாடில்லையுயிர்க்கு"

என்றுசொல்லுகிறார். இதுஉண்மைதானே. மாறுபாடில்லாத (வாதம், பித்தம், கபமென்னு முப்பகுதிகளையும் தளம்பாது வைத்திருக்கும்) சாப்பாடுகளை உண்ணும் மிருகங்களைப் பாருங்கள் அவைகளுக்கு மூப்பும் கிடையாது பிணியுங்கிடையாது. இயற்கையை நன்குணர்ந்த தொம்சன் (Thomson) என்னும் ஆங்கில சாஸ்திரி ஒருவர் "காட்டுமிருகங்கள் தற்சம்பவமாய்ச் சாவதே ஒழிய மூப்பாலும் பிணியாலும் சாகிறதில்லை" என்றுசொல்லுகிறார். அப்போ மனிதனுக்குத்தானு எட்டிலடங்காத வியாதியும் வீட்டிலடங்காத மருந்தும்வேண்டும்?

போசனமென்பது நாம் சாப்பிடும் பலகாரன்னபானதிகள் மாத்திரமல்ல, அபின், கஞ்சா, பிரண்டி, விஸ்கி, கள், சாராயம், புகையிலை, தேயிலை, கோப்பி, மாமிசம் என்பவைகளும், இன்னும் பிறவும் சேர்ந்ததுதான் தற்கால போசனமாகும்,

இவற்றுள் முதலாவது பிரண்டி, விஸ்கி, கள், சாராயமென்னும் மஸ்துப்பதார்த்தங்களை எடுத்துப்பார்ப்போம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்
'துஞ்சினார்செத்தாரின்வேறல்லரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்'

என்று சொல்லுகிறார். ஆனால் இக்காலத்து வரும் தீமைகளை நஞ்சுக்கு மொப்பிட்டலாகாது நெருப்புக்கு மொப்பிட்டலாகாதென்று சொல்லுகின்றோம். இத்தீமைகளைப் பாஷையில் அமைக்கவுமியலாது. நஞ்சைச் சாப்பிட்டவன் சமாதானமாய் ஒருமுறையிலே "குளிர்ந்து" செத்துப்போகின்றான். இதனால் ஒருவருக்கு மொரு கஷ்ட நஷ்டமுமில்லை. அப்படியிருந்தாலும் சிலதினங்களுக்கிருக்கும். குடிக்கிறவன்தான் ஒவ்வொருநாளு மிறக்கிறதுமாத்திரமல்ல, அவனைச் சேர்ந்த சுற்றமித்திரர்களுக்கும், சாதிக்கும், தேசத்திற்கும் நிராகரத்தை யுண்டுபண்ணுகிறான்.

குடியால் வெறியுண்டாகின்றது, வெறியாற் கொலை,களவு, முதலியனவுண்டாகின்றன.அவைகள் ஏற்படத் தேசத்திலே வழக்குகளதிகரிக்கின்றன. காமத்தினால் தேசத்திலே மேகவியாதிகளும், மற்றும்நோய்களு மேற்படுகின்றன. இந்நோய்களால் சந்ததியில்லாமற் போகின்றது. இருந்தாலும் குடிகாரச்சந்ததியாயிருக்கின்றது. பொருட்செலவால் தாரித்திரியமுண்டாகின்றது. தாரித்திரியத்தால் பெண்சாதி பிள்ளைகள், பிதாமாதாக்கள், உண்ண உணவிற்கும், உடுக்கத்துணிக்கும், வழியில்லாமையாலும், உற்ற கவலையாலும் நோய்வாய்ப்பட்டு வருந்துவது மாத்திரமல்ல; தொற்றுநோய்கள் சுவாலைவிட்டெரியும் பொழுது இப்பரம ஏழைகளையே எரித்துமுடிக்கின்றன. சிறு குழந்தைகள் தாய்க்குப்போதிய போசனமில்லாமையால், பாலில்லாது, முதலாம், இரண்டாம், மூன்றும் மாசங்களிற் பசியால் இறந்துபோகின்றன. நாட்டிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் இரத்தப் பெருக்கெடுப்பதால், நாட்டிலே பசியும், பட்டினியும், நோயும், கல்விப்பெருக்கீனமும், சமாதானமுமேற்படுகின்றன, இவற்றை உணர்ந்து தான்போலும் பெரியோரும்:—

'கள்விலைபகாவோர் கள்ளினை நுகர்வோர்,
கள்ளருந்துதற்குடன்படுவோர், கள் அருந்தினரைமகிழ்வோர், கள்ளருந்தியமலப்புழுவாகிப்
பின்நுகர்ந்து பின் இறந்து மீட்டு மீட்டு நாட்கழிப்பர்".

என்றுமந்திரித்தனர்.

விஷயம் பின்னவுபட்டாலும் இவ்விஷயத்தை விரிக்கவேண்டியே ஏற்படுகின்றது. (வரும்).

S. M.

பகாள்.

## மகா பெரிய வெண் கொள்ளைநோய்.

க்ஷயரோகவியாதி தொற்றுதபடி சாவதானமாயிருந்து இவ்வியாதி பரம்புதலைத் தடுத்தல். அதிகப்பற்றாகக் க்ஷயரோக பீஜத்திலிருந்தே இவ்வியாதி தொற்றுகின்றது. தொற்றுவியாதி தானாகவே அதிகம் தீங்கைக்கொண்டுவரமாட்டாது, ஆனால் அதனோடு உடனிகழும் இன்னும் பலகாரணங்களினால் அத்தொற்றுநோய் தலைகாட்டத் தொடங்கும்போது அது மிகவும் தீங்கைவருவிக்கக்கூடியதாயிருக்கின்றது. இவ்விதமாக ஒருவனுக்குத் தொற்றுநோய் வந்துவிட்டால் அதை இலகுவில் மாற்றுவது சுலபமன்று. நாம் இவ்வியாதியை முற்றாக அகற்ற வேண்டுமென்றால் முளையிற்றானே களைந்து வியாதி தொற்றுதலைத்தடுக்கவேண்டும். இத்தொற்றுவியாதி தொடக்கத்தில் இலகுவாகத் தடைப்பண்ணக்கூடியதாகவிருக்கிறது. அதற்காணமுறைகள் எல்லாராலும் செய்யக்கூடிய மிகச்சுலபமானவைகளாயிருக்கின்றன. ஏனெனில் அதைத் தடுக்கும் வழிவகைகள் மிகவும் இலகுவாயிருக்கின்றன. கொஞ்சமேனும் பணச்செலவில்லை. அறிவும் முக்கியகவனமுமே வேண்டியனவாகின்றன.

### வியாதி தொற்றும் வழி.

1. நோயாளிகளுடன் சகவாசஞ் செய்வதால்.

அநேகர் தங்களுக்குத் தெரியாமற் க்ஷயரோக வியாதியினாற் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வியாதி வேறுபெயருடன் மறுவேடம் பூண்டிருக்கக்கூடும். ஆதலால் சரியானசோதனை செய்து வியாதி இன்னதென்று திட்டமாகக் கண்டுபிடிப்பது மிகவும் இன்றியமையாதகாரியம். இவ்வியாதியினால் வருந்துகிறவர்கள் இருமும்போதும், தும்மும்போதும் இவ்வருத்தத்தை மற்றவர்களுக்குத் தொற்றச் செய்யக்கூடும். நோயாளி மற்றவர்களின் உதட்டில் முத்தமிடுதல் மிகவுந் தீங்கானகாரியம். இருமும் பொழுது வாயைமறையாமல் இருமுவது இத்தேசத்தில் மிகவுஞ் சாதாரணமான ஓர் குறை. இதுவே நோய்நேரே தொற்றுவதற்கு வலிய ஏதுவாயிருக்கின்றது.

2. க்ஷயரோக பீஜமுள்ளசளி.

தீவிரமான க்ஷயரோக வியாதியாற் பீடிக்கப்பட்டிருக்கின்றவர்களில் அதிகப் பகுதியானோரின் சளியிலேயே ரோகபீஜம் காணப்படுகின்றது. கண்ட விடங்களிற் கவலையீனமாய்த் துப்பும் ஊத்தைப் பழக்கந்தா னிவ்விதமாய் இந்தக்கொடிய வியாதி பரம்புகிறதற்குக் காரணம். இந்தத்தூர்ப்பழக்கம் பெரும்பாலும் எங்குங்காணப்படுகிறது. இதை எப்படியும் தடுக்கவேண்டும். இத்தூர்ப்பழக்கத்தை முற்றாயகற்றிப் போடுவதற்கு உதவி செய்து சமூகத்தாருக்கு நீ செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுவாயாக. இதுவுங் கஷ்டமான காரியமென்பதை நீ காணக்கூடும். ஜனங்கள் யாவரும் முயற்சியாயும் புத்திசாதுரியத்தோடும் ஒத்து வேலைசெய்தல் மிகவும் அவசியம். நீசெய்யுந் தினையளவு சேவையும் கடைசியிற் பனையளவாகக்கூடும். இதுவே மக்கட்கடனாகும்.

3 நோய்நேரேயன்றி வேறுவழியாகத் தொற்றுதல்.

(1) வீடுகளிலே பொதுவாகப் பாவிக்கும் கோப்பை பீங்கான்களைப்பற்றி முக்கியமாய்க் கவனஞ் செலுத்தவேண்டும். இவ்விதமான பாவிப்பினால் வருங்கெடுதி பெரும்பாலும் வறிய குடும்பங்களிற் காணப்படுதற்கு அவர்களின் இயலாமையேகாரணம். தங்கள் தங்கள் பாவிப்பிற்கு வெவ்வேறு பாத்திரங்கள் வைத்துக் கொள்ளுகிறதற்கியல் பில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களை வேறு வேறு பாத்திரங்கள் வைத்துக்கொள்ளும்படி சொல்லுதலும் பயனற்றதாகும்.

வீட்டிலே இந்த நோயாற் பீடிக்கப்பட்டவரொருவரிருப்பாராயின் மேற்சொல்லப்பட்ட காரியங்களைக் குறித்து கவனஞ் செலுத்தவேண்டும். 'க்ஷயம்' தொற்றுவியாதியென்பது நம்மவருக்குட் பெரும்பான்மையோருக்குத் தெரிந்தவிஷயமே, அவ்வண்ணமேமற்றவர்கள் விட்டமிச்ச சொச்சங்களைச் சாப்பிடுவதனாற் பெருந்தீங்கு இருக்கிறதென்று அவர்களுக்குத்தெரியும். பெரும்பாலும் இந்நோயின் ஆராய்வும் தெளிவும் நன்கு புலப்படாமலிருக்கக்கூடும். சிலவேளைகளில் ஆராய்வு செய்து சொன்னது பிழையாயிருக்கும். இவைகளை நாம் மனதில் ஞாபகப்படுத்திவைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஆகவே இவ்விதம் செய்த சோதனை சிலவேளைகளிற் பிழையாயிருத்தலால் தீங்கு உண்டாகின்றது. சரியாக ஆராய்வுசெய்து இது தான் வியாதி என்று கண்டறிதல் மிகவும் முக்கியமான காரியம். இக்காரியங்களைப்பற்றி உன்வீட்டுக்குக் கிட்டவிருக்கும் வைத்தியரிடம் யோசனைகள் கேட்கவேண்டும்.

இத்தீவின் சிலபாகங்களிலே சிரட்டையிலே மணல் இட்டு நோயாளிகளுடைய எச்சில் உமிழ்நீரை அதில்வாங்கிவைத்திருக்கும் மிகவும் தீங்கான ஒருபழக்கமிருக்கின்றது. இவ்விதமாகச் சிரட்டையிலே சேர்ந்த துப்பலையுஞ் சளியையும் அப்பாத்திரம் நிரம்பியவுடன் வெளியில் எறிந்துவிடுகிறார்கள்.

இப்படிச் செய்வதால் மகா தீங்குஉண்டாகின்றது. எப்படியெனில் இவ்விதமாக எறியப்பட்ட எச்சிலுஞ் சளியுமுள்ள மண்கட்டி உடைந்து தூளாகும்போது அதிலேயுள்ள ரோகபீஜங்கள் புழுதியுடனே சேர்ந்து பரந்துவிடுகின்றன. சளியைக் காயவிடாமல் ஈரமாக வைத்திருந்தாலதனால் ஒரு கெடுதியுமில்லை. கூடுமானால் நோயாளி துப்பும்படி தண்ணீரும், நெருப்புத் தண்ணீருங் கலந்த ஒரு பாத்திரங் கொடுக்க வேண்டும். இவ்வித முன்னுற் செய்யமுடியாது போனால் அப் பாத்திரத்திலுள்ள தண்ணீரிற் கொஞ்சம் சுண்ணும்பு கலந்து அதற்குள் உமிழ்ந்து பாத்திரத்திலுள்ள அழுக்கை ஆழப்புதைத்துவிடல் வேண்டும். துப்பினுற் செய்யப்பட்ட தடுக்குகளில் அல்லது அவைகளைப்போற் தூசி கிளப்பிக் கெடுதிவருவிக்கக்கூடிய பொருட்களின்மீது துப்பாதே.

(2) நோய்பற்றியிருக்கும் உணவுப்பதார்த்தங்கள்—இவையும் நோயைத் தொற்றப்பண்ணுங் கருவிகளாயிருத்தல் கூடும். இவ்வூரிலே ஆடுமாடுகளுக்குக் க்ஷயரோகவியாதி மிகவும் அருமையாயிருத்தலால் அவைகளுடையபால் அதிஷ்டவசமாகக் குற்றமற்றதாயிருக்கின்றது. ஐரோப்பியதேசங்களிற் பாலிற் குற்றமிருக்கிறபடியால் அது வருத்தங்களை யுண்டாக்கிவிடுகின்றது.

### மனதில் வைத்துக் கொள்ளவேண்டிய முக்கியமான காரியங்கள்.

(1) க்ஷயரோகவியாதியாற் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுடன் சிறுபிள்ளைகளைச் சகவாசம் பண்ணவிடப்படாது.

(2) க்ஷயரோக வியாதி முற்றின நோயாளிகளை எப்பொழுதும் தனிமையான இடங்களில் வைத்துக்கொள்ளவேண்டும். கூடுமானால் இவர்களை வைத்தியசாலையிற் சேர்த்து அங்கே வைத்து வைத்தியஞ் செய்விக்கவேண்டும்.

(3) நல்லாய்ச் சுவாசஞ் செய்யவேண்டிய சுகாதார ஒழுங்குகளையறிந்து அதன்படி நடக்கப்பழகிக்கொள். நீ இருமும்பொழுதும், தும்மும் பொழுதும் மற்றவர்களுக்குன் சுவாசம் படாதபடி வாயை மூடிக்கொள்.

(4) க்ஷயரோகவியாதியை மாற்றுகிறதற்கேனும், அவ்வியாதி வராமற் தப்புதற்கேனும், உனக்கப்படி வருத்தமிருப்பதுபோல் ஏலவே தோன்றினால், ஒழுங்காக டாக்குத்தரைக் கொண்டு உன்னுடம்பைச் சோதிப்பது அவசியம்.

(5) க்ஷயரோகவியாதியைத் தடுப்பதற்கு "துப்பக்கூடாது" என்னும் முக்கிய பிரமாணத்தைக்கைக்கொண்டு நட. சுகவீனத்தின் நிமித்தம் அவசியமாய்த் துப்பவேண்டியிருந்தால் அதற்குரிய பாத்திரங்களிலே துப்பு.

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

## சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப் பத்திரம்.

கார்க்கடகம், ஓலைப்பாய், ஓலைஉமல், தேங்காயெண்ணெய், ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனைஓலை, தம்புக்கட்டு, ஈக்குக்கட்டு. கூட்டத்தடி, தும்புக்கயிறு, சாக்குஎன்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம உப்புமால் தொண்டமனுர் உப்புக்குதம் ஆகிய இந்தவிடங்களில் கொடுக்கிறதற்கு 1924 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந்திகதி தொடக்கம் 1925 ம் ஆண்டு புட்டாதி மாதம் 30 ந்திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரை யிடப்பட்டதாயு மிருக்கவேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசன்றத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்புஅரசிறைவருமானத்தலைவர் கந்தோருக்கும் விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரம் கேள்விக் காரன் தானுகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரேநேரத்தில அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் Tender for Supplying Materials, 1924—25 என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் போட்டிருத்தல் வேண்டும். அப் பத்திரம் யாழ்ப் பாணக் கச்சேரியில் 1924 ம் ஆண்டு புரட்டாதிமாதம் 5ந் திகதி பிற்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

5 கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடதாசி யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக் கடதாசில் எழுதாத வேறு எவ்விதப்பத்திரமும் ஏற்கப்படமாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்பமுதலெழுத்துக விடப்படவேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் பிழையென விலக்கப்படும்.

6. முழுவிபரங்களும் இந்தக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

ஆர். வை. டெனியல்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1924 ம் ஆண்டு ஆவணிமீ 5 உ. (G. 422.)

## பிரகடனம்.

ஸீனியர் வகுப்புக்குரியவை. 1924.

**நிரைமீட்சிச்சருக்கம்:** வில்லிபுத்தூரர் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அஞ் 12.)

**திருக்குறள் முதற்பத்ததிகாரம்:** இப்பத்ததிகாரங்களும தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றோடு விலை சதம் 50. (அஞ் 8.)

**பெண்கல்வி:** மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்க வேண்டியது விலை சதம் 85. (அஞ் 14.)

ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

**நாலடியார் முதற் 15அதிகாரம்:** இப்பதினைந்தகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கிலமொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

**சிசுபாலசரித்திரம்:** விலை சதம் 50. (அஞ் 8.)

மற்றும் நூல்கள்.

**மயானகாண்டம்:** ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள இக்காண்டம் பொழிப்புரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு முதலியவற்றுடன் 2ம்பதிப்பு. தமிழ் 7ம் 8ம் வகுப்புகளிற் கல்விபயிலும் மாணக்கருக்குச் செய்யுட் பாடமாகஉபயோகிக்கப்படுவது. விலை சதம் 50.

**கதிரையாத்திரைவிளக்கம்:** கதிர்காமயாத்திரை அநுபவத்தையும் கதிர்காமவேலவர் திருவருட் பெருமையையும் கொண்டிச்சின்னநடையிற் கூறுவது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்பாடிய கதிர்காமவேலவர்கீர்த்தனம், பரமானந்தப்புலவர் பாடிய நல்லைக் கந்தர் கீர்த்தனம், அகவல்என்னுமிவைகளுடன், விலைசதம்25.

**சிவராத்திரிவிரதமான்மியம்:** சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது. தோத்திரப்பாக்களுடன விலை சதம் 10. (அஞ் 2.)

அதிகமாக வாங்குவோருக்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
(Q. 50.) Vannarponnai.

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானுற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானுறு.
ஞாபி. வல்லுவெட்டித்துறை. (H. 29.)

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

## அரைக்கீரை விரைத் தைலம்.




இதன் குணம்.

பித்த மேகசீரணது சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காதுஇரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்தநோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாருது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேச் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வீ. பீ. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வி: எஸ். கோமளத்தம்மாள்,
மாணியுபாக்ஞரர்,
(Y 26) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஒளஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

# மகா வீரிய தங்க பஸ்பம்.

வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்ஷக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரிழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல சர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

## குருநாக பஸ்பம்-மூலத்திற்கு

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அநுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும், சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம். தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறுது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
சி. மலையப்பசாமிப்பிள்ளை,
(Q. (B) 46) நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

## பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

| | | | |
|---|---|---|---|
| 1 தெ. ஜோடிப்பு | 1க்கு | ரூபா 4 | அணு 8 |
| 2 தெ | ,, | ,, ரூபா 3 | அணு 4 |
| 3 தெ | ,, | ,, ரூபா 2 | அணு 8 |

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

உங்கள் குழந்தைகளுக்கு

## லக்ரோஜின்

என்னும்
இயற்கையான பாலுணவை ஊட்டி
நன்மையடையுங்கள்.
இந்தப் பாலுணவே
முலைப்பாலுக்குச் சமானமானது.
இது
தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்
சக்திவாய்ந்தது.
இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்
இறுக்கமான தசைநார்களும்
அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்
இருக்கிறார்கள்.

## லக்ரோஜின்

சகலகலைப் பராக்கிரம முடையவராக்கும்.
இந்த உணவை
இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்
நேரே எங்களுக்கு எழுதுங்கள்:
மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விப்ரங்களடங்கிய புத்தகமும் உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன்.

நெஸ்லின் & அங்கிளோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

H. O.

நயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரொஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ..........................................

(Q. 49.) விலாசம்:— ..........................................

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.